**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் பங்குனி திங்கள் 09-ம் நாள்**

**S.T.C. No. 13/2019**
(குற்ற எண்.117/2018, தேவகோட்டை நகர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தேவகோட்டைநகர் காவல்நிலையம்,
குற்ற எண்.117/2018.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.மரியதாஸ் (55/2018)
த/பெ. சேசுதாஸ்

.....எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி
வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>தேவகோட்டை நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண்.117/2018. |
| 2. | எதிரிகள் | 1.மரியதாஸ்<br>த/பெ. சேசுதாஸ்<br>**<u>முகவரி:</u>**<br>அகதிகள் முகார், தேவகோட்டை தாலுகா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | குற்றச்சாட்டுகள் | எதிரி மீது இதச பிரிவு 304-A-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. | | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 16/07/2018 | | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 16/07/2018 | | |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 16/07/2018 | முன்பிணை பெற்ற நாள்:இல்லை | |
| | | 17/07/2018 Bailed by Court | | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 08/01/2019 | | |
| 8. | கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 22/03/2021 | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | ----- | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 22/07/2022 | 22/07/2022 |
| | | அ.சா.2 | 19/10/2022 | 19/10/2022 |
| | | அ.சா.3 | 19/10/2022 | 19/10/2022 |
| | | அ.சா.4 | 19/10/2022 | 19/10/2022 |
| | | அ.சா.5 | 23/02/2023 | 23/02/2023 |
| | | அ.சா.6 | 24/11/2025 | 24/11/2025 |

| | | | |
|---|---|---|---|
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 17/02/2026 | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | ------ | ----- |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 22/03/2021 | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 17/02/2026 | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 23/03/2026 | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி இதச பிரிவு 304-A-கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** | |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.செல்வராஜ், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் இறந்த பன்னீர்செல்வம் கடந்த 16/07/2018ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தேவகோட்டை மளிகை கடைக்கு போய்விட்டு வருவதாக அவருக்கு சொந்தமான TN 55 Z 2486 என்ற பல்சர் இரு சக்கர வாகனத்தில் இறந்த நபர் பன்னீர்செல்வமும் தாழையூரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் பாண்டியும் பன்னீர்செல்வம் வண்டியை ஓட்ட வண்டியின் பின்னால் பாண்டி உட்கார்ந்து தேவகோட்டையில் உள்ள மளிகைக்கடையில் மளிகை சாமான்கள் வாங்க போகும்போது தேவகோட்டை வாரச்சந்தை அருகே வெண்ணிலா கோழி கடைக்கு முன்பு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற டிப்பர் லாரி அதே திசையில் சென்ற இறந்த பன்னீர்செல்வம் டிப்பர் லாரியை முந்தி செல்லும்போது இறகுசேரியை சேர்ந்த அழகன் மகன் ராதா என்பவருக்கு செந்தமான TN63 Y 4979 என்ற டிராக்டரை எதிரி எதிரே தெற்கிலிருந்து வடக்கே நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இறந்த பன்னீர்செல்வம் ஒட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி பன்னீர்செல்வம் கீழே விழுந்ததில் வயிறு, நெஞ்சு ஆகிய இடங்களில் அடிபட்டு இறப்பை ஏற்படுத்தியது குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 304-A-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவு 304-A-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 பாண்டிமீனாள் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்த பன்னீர்செல்வம் தன்னுடைய மகன் என்றும் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு தேவகோட்டைக்கு தனது இரு சக்கவர வாகனத்தில் அவர் நண்பர் பாண்டியுடன் சென்று கொண்டு இருந்த போது சந்தை ரோடு அருகே எதிரே வந்த டிராக்டர் தன் மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன் என்றும் தான் தனது மகன் காயம்பட்டதை கேள்விப்பட்டு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும் அங்கு இறந்து விட்டதாக சொன்னார்கள் என்றும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் (புகார் மனு அ.த.சா.ஆ.1) என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 தர்மலிங்கம் தனது சாட்சியத்தில் தான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றும் தான் ஓர்க்ஷாப்பில் வேலை செய்து வருகிறேன் என்றும் விபத்தில் இறந்து போன பன்னீர்செல்வம் தனது நண்பர் என்றும் அவர் இறந்து விட்டதாக தனக்கு தகவல் சொன்னார்கள் அவர் பல்சர் பைக்கில் சென்றதாகவும் டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் சொன்னார்கள் என்றும் தான் தேவகோட்டை அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.4 மருது தனது சாட்சியத்தில் தான் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன் என்றும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் தானும் தனது அப்பாவான அ.சா.3ம் தேவகோட்டைக்கு போய் கொண்டிருக்கும் போது ஒத்தக்கடை வாரச்சந்தை அருகே கடந்த 4 வருடங்களுக்கு முன்பு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் (பார்வை மகஜர் அ.சா.ஆ.3) என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.5 மருது தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.4 தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.6 முத்துக்குமார் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை

தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து மாதிரி வரைபடத்தை அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கையை அ.சா.ஆ.6 ஆகவும், விபத்து ஏற்படுத்திய வாகனமான டிராக்டர் TN 63 Y 4979 வாகனத்தின் வாகன தணிக்கை சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகவும், விபத்துக்குட்பட்ட TN 55 Z 2486 வாகனத்தின் வாகன தணிக்கை சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) கடந்த 16/07/2018 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் TN 55 Z 2486 என்ற இருசக்கர வாகனத்தில் இறந்த பன்னீர்செல்வமும், பாண்டியும் பன்னீர்செல்வம் வண்டியை ஓட்ட பாண்டி பின்னால் அமர்ந்து

தேவகோட்டை வார சந்தை அருகே வெண்ணிலா கோழிக்கடைக்கு முன்பு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற டிப்பர் லாரியை அதே திசையில் சென்று இறந்த பன்னீர்செல்வம் டிப்பர் லாரியை முந்தி செல்லும்போது TN 63 Y 4979 என்ற டிராக்டரை எதிரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பன்னீர்செல்வம் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் பன்னீர்செல்வம் இறந்துவிட்டார் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும்.

(8.2) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாகவே சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் விபத்து சம்பந்தமாக தனக்கு நேரடியாக தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ம் அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.2 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் இதர சாட்சிகளில் அ.சா.3 மற்றும் 4 ஆகியோர் பார்வை மகஜர் சாட்சிகளாவர். அ.சா.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் அதிகாரி ஆவார். அ.சா.6 விசாரணை அதிகாரி ஆவார். இவ்வழக்கில் சம்பவத்தை கண்ட கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.2 அரசு தரப்பில் விசாரிக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளார். மேலும் சம்பவத்தை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் வேறு எந்த சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(8.3) விபத்து எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதாக அரசு தரப்பில் வழக்கிடப்பட்டுள்ளபோதிலும் அ.சா.ஆ.1 புகாரில் புகார்தாரரின் மகனான பன்னீர்செல்வம் தலைக்கவசம் இல்லாமல் மதுபோதையில் வண்டியை ஓட்ட வண்டியின் பின்னால் பாண்டி உட்கார்ந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அ.சா.ஆ.1 புகாரிலிருந்து இறந்துபோனவர் மதுபோதையில் வண்டியை ஓட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் அ.சா.ஆ.1 புகாரில் இருந்து இறந்துபோனவர் அதே திசையில் சென்று கொண்டிருந்த டிப்பர் லாரியை முந்தி செல்லும்போது எதிரே வந்த எதிரியின் வாகனம் மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இறந்த பன்னீர்செல்வம் லாரியை முந்தி செல்ல முயலும் போது விபத்து நடைபெற்று இருப்பதை கருத்தில் கொள்கையில் சம்பவத்தை கண்ட கண்ணுற்ற சாட்சிகளாக இவ்வழக்கில் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றபோதிலும் அ.சா.ஆ.1 புகாரில் கண்டுள்ளது போலவே சம்பவம் நடைபெற்றதாக அனுமானத்திற்கு எடுத்துக் கொண்டாலும் விபத்து எதிரியின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டதா என்பது சந்தேகத்திற்கு உட்பட்டதாகவே உள்ளது. மேலும் அரசு தரப்பு வழக்குப்படி எதிரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தின் படி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் போது சாலையின் இடதுபுறமே சம்பவ இடம் அமைந்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். எனவே மேற்கண்ட விவாதங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கையில் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே சந்தேகத்தின்

பலனைப் பெற எதிரி தகுதியுடையவர் ஆகிறார் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9. முடிவாக, எதிரி இதச பிரிவு 304-A-கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.03.23 18:54:03 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | பாண்டிமீனாள் | அ.சா.1 | புகார்தாரர் |
| 2. | தர்மலிங்கம் | அ.சா.2 | கேள்விப்பட்ட சாட்சி |
| 3. | சுப்பிரமணி | அ.சா.3 | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | மருது | அ.சா.4 | பார்வை மகஜர் சாட்சி |
| 5. | மருது ( சார்பு ஆய்வாளர்) | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| 6. | முத்துக்குமார் (துணைக் கண்காணிப்பாளர்) | அ.சா.6 | விசாரணை அதிகாரி |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 22/07/2022 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து | 19/10/2022 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | பார்வை மகஜர் | 19/10/2022 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 23/02/2023 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 24/11/2025 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | பிரேத விசாரணை அறிக்கை | 24/11/2025 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | விபத்து ஏற்படுத்திய டிராக்டர் TN 63 Y 4979 வாகன தணிக்கை சான்றிதழ் | 24/11/2025 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |
| 8. | TN 55 Z 2486 வாகன தணிக்கை சான்றிதழ் | 24/11/2025 | அ.சா.ஆ.8 | அரசு தரப்பு | அசல் |
| 9. | பிரேத பரிசோதனை அறிக்கை | 24/11/2025 | அ.சா.ஆ.9 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி  தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.03.23 18:54:11 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.